மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அனைத் துலகப் பயணிகள் தங்குவதற்கு விடுதிகள் ஏற்படுத்த வேண்டுமென்று அரசு எண்ணுகிறது. தனியார் துறையிலிருந்து கட்டுவதற்கு முன் வந்தால் மத்திய அரசு உதவ ஒப்புதல் அளித்திருக்கிறது. அந்த வகையிலேதான் சென்னையிலே ஒரு ஹோட்டல், ஹோட்டல் ஸ்டால் கட்டுவதற்காக இடம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் கிடைக்கவில்லை. கிடைத்ததற்குப் பிறகு கட்டுவதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. தி. பொன்னுமலை: தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத் திலே இருக்கிற ஏர்க்காட்டிற்கு மறைந்த பேரறிஞர் அண்ணா அவர் களும், தற்பொழுதைய முதலமைச்சர் அவர்களும், கல்வி அமைச்சர் அவர்களும் வந்திருந்தபொழுது ஏர்க்காட்டைப் பெரிய உல்லாசப் பயணிகள் வருகின்ற இடமாகவும், உல்லாச நகரமாகவும் மாற்ற வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அங்கே மற்ற நாடு களிலிருந்து வந்து படிக்கக்கூடிய அளவிற்கு கான்வென்ட் கூட இருக் கிறது. எனவே, அப்படிப்பட்ட இடத்தை உல்லாசப் பயணிகள் வருகின்ற இடமாகவும் உல்லாச நகரமாகவும் ஆக்குவதற்கு ஏற் பாடுகள் செய்ய அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: நான் அதைத்தான் முதலிலே சொன்னேன். 1.2 லட்சம் ரூபாய்க்கு ஒரு பயணிகள் விடுதி கட்டுவதற்குத் திட்டம் இருக்கிறது. விரைவிலே கட்டுவதற்கு அரசாங்கம் எடுத்துக்கொண்டுள்ள திட்டமாகும்.

திரு. ந. தீர்த்தகிரி: ஏர்க்காட்டிலே சுற்றுலா மாளிகை கட்டு வதற்கு உத்தேசம் இருப்பதாகச் சொன்னார்கள். அதுபோன்ற சுற்றுலா மாளிகை தாராபுரம் வட்டத்திலே உள்ள ஹொகனக் கல்லிலே கட்டுவதற்கு, ஒரு டூரிஸ்ட் சென்டராக அதை ஆக்குவதற்கு மத்திய சர்க்காரின் உதவியின்பேரில் ஏற்படுத்துவதற்கு உத்தேசம் உண்டா? அப்படியெனில் இது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: ஹொகனக்கல்லிலே பயணிகள் விடுதி அமைக்க வேண்டுமென்று அந்த மாவட்டத்தின் ஆட்சியாளர் ஒரு திட்டம் கொடுத்திருக்கிறார் கள். பொதுமக்களிடமிருந்து நிதி வசூல் செய்வதற்கும் அவர்கள் ஒப்புதல் அளித்திருக்கிறார்கள். அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

State Trading in Foodgrains.

* 220 Q.—THIRU T. MARTIN: Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state—

(a) whether there is any proposal pending now before the Government to introduce State Trading in Foodgrains; and

(b) if so, the particulars thereof?

1970 செப்டம்பர் 3]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ): ஒருவகையில் அரசு நெல், அரிசி வர்த்தகத்தில் ஓரளவு பங்கேற்றுள்ளது உண்மை தான். நாம் அரிசியைக் கொள்முதல் செய்கிறோம், பொது விநியோக வழங்கல் முறையும் செயல்படுத்தி வருகிறோம். ஆனுல் தனியார் துறைகளை நீக்கி இந்த வர்த்தகத்தின் முழு உரிமையையும் அரசு எடுத்துக்கொள்ளவில்லை. அரசு வியாபார நோக்குடனும் இவ்வணிகத்தை நடத்தவில்லை. விலையை நிலைப்படுத்தவும் போது மான அளவு அரிசி கிடைக்க வகை செய்யவும் அரசு இவ்வணிகத்தை எடுத்துக்கொண்டுள்ளது.

திரு. டி. மார்டின்: பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்க கோடவுன் ஆவடியில் உள்ளதில் கோதுமையையும் மைலோவையும் அங்குள்ள அதிகாரிகள் தனி வியாபாரிகளுக்கு ஆலந்தூரில் உள்ள வியாபாரிகளுக்குக் கொடுத்ததாக செங்கற்பட்டு மாவட்டத் திலிருந்து பெரிய வியாபாரிகள் கூறியிருக்கிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? கடந்த மார்ச் மாதத்தில் அம்மாதிரி நடைபெற்றிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரலாம்.

DR. H. V. HANDE: Sir, the Hon. Minister has stated in his reply that the Government are partially indulging State Trading in respect of foodgrains. Is it not a fact that a few months ago, large stocks of paddy which was purchased by the Government and stored, was found to be not fit for human consumption and so later on the Government had called for tenders for the sale of these unused stocks which had become spoiled? So, will the Hon. Minister tell us who is responsible for this state of affairs and whether he has fixed up responsibility on any particular officer in regard to the deteriorating stock of paddy?

மாண்புமிகு திரு. ப. உ: சண்முகம்: தலைவர் அவர்களே, மனிதர்கள் சாப்பிடுவதற்கு லாயக்கற்ற வகையில் உணவுப்பொருட் கள் இருந்ததாகச் சொல்வதை இந்த அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. பழுது அடைந்தது உண்மைதான். குறுவை ஈரமாக இருந்தாலும் மழை பெய்த நேரத்திலே குறுவையைக் காயவைக்காமல் அப்படியே கொண்டுவந்து அடுக்கி வைக்கும் அவசியம் இருந்தாலும் சிறிது பழுது ஏற்பட்டிருந்தது. எவ்வளவு பாதகம் ஏற்பட்டது என்று கேட்டார்கள். தனிக்கேள்வி போட்டால் விடை சேகரித்துத் தர லாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: உணவுத் துறையிலே தென் மண்டலம் கொண்டு வருவதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறதா? அதுபற்றி மத்திய அரசாங்கம் ஏதாவது கேட்டு மாநில அரசாங்கத்திற்கு தெரிவித்திருக்கிறார்களா? நான்கு ராஜ்யம் களை இணைத்து ஒரு மண்டலமாக உணவுத் துறையைப் பொறுத்த வரையில் ஆக்குவதற்கு இந்த அரசாங்கத்திடம் கொள்கை விளக்கம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: தென் மண்டலமாக இருக்க வேண்டுமென்று முன்பிருந்தே அவர்கள் வற்புறுத்தி வருகிறார்கள். பற்றாக்குறையுள்ள கேரளத்தைப் பக்கத்திலே வைத்துக்கொண்டு தமிழ்நாடு எவ்வளவுதான் தன்னிறைவு பெற்றாலும் அது பயனுள்ளதாக இருக்காது என்பதால் தென் மண்டலம் வைத்துக் கொள்வதற்கில்லை என்று வாதிட்டு வருகிறோம். தென் மண்டலம் என்று ஒரு மண்டலமாக ஆக்க வேண்டுமென்று யாரும் கேட்க வில்லை.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மத்திய அரசாங்கத்திட மிருந்து தென் மண்டலமென்று ஒரு மண்டலம் ஆக்கலாமா என்று கடிதம் வந்தது உண்மை. அப்படிச் சேர்க்கக்கூடாது என்று நாம் பதில் எழுதியிருக்கிறோம். கேரளத்திற்கு அரிசி கொடுப்பதற்கு மத்திய அரசே பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும், அப்படிச் செய்தால் தென்மண்டலம் அமைப்பதிலே ஆட்சேபணை இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. தென் மண்டலம் ஆக்குவதிலே என்ன சங்கடம் இருக்கிறது என்றால் மூன்றாம் தர நெல் இங்கிருந்து கேரளத்திற்குப் போய்விடும். அதனால் இங்கே நெல்லின் விலை உயரும். ஆந்திரத்திலேயிருந்து உயர் ரக அரிசி இங்கே வரும். அதன் காரணமாகவும் இங்கே விலை உயர்ந்துவிடும். எனவேதான் அரிசி விலை உயர்ந்துவிடும் என்ற காரணத்தால் தென் மண்டலக் கொள்கையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நான் ஒரு விளக்கம் சொல்லி விடுகிறேன். அமைச்சர் அவர்கள் தந்திருக்கின்ற விளக்கம் மந்திரிசபைக்கே தெரியாது. தென்மண்டலம் என்பது கூடவே கூடாது என்பதுதான் நிலை. அவர்கள் இப்பொழுது புதிதாக வந்தி ருக்கின்ற நிலைமையைச் சொன்னார்கள். தென்மண்டலம் ஏற்றுக் கொள்வதாகச் சொன்னார்கள் என்பதிலே முரண்பட்ட கருத்துக்கள் இருக்கின்றன என்று பத்திரிகைக்காரர்கள் நினைத்துக் கொள்வார்கள். அந்தப் புதிய மாற்றத்தைப்பற்றித் தகவல் இல்லை என்ற காரணத் தாலேதான் நான் சொன்னேன் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அந்தக் கடிதம் சமீபத்திலே தான் வந்தது.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : எனவே தவறு ஒன்றும் இல்லை. மந்திரிசபையிலே வரவில்லை, புதிதாக உணவு அமைச்சர் அவர்கள் எடுத்து இருக்கிற முடிவு. தென் மண்டலம் கூடாது என்று சொல்லிவிட்டோம். இப்பொழுது அப்படிப்பட்ட யோசனை சொல்லியிருப்பது எனக்குத் தெரியாது.

DR. H. V. HANDE : Sir, may I know whether the answer was given before consulting the Cabinet or after consulting the Cabinet?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : 10, 15 நாட்களுக்கு முன்னால் தான் இந்தக் கடிதம் வந்தது. இதைப்பற்றி முதலமைச்சர் அவர் களிடத்திலே கலந்து பேசித்தான் பதிலை அனுப்பியிருக்கிறோம்.

1970 செப்டம்பர் 3]

இதை அமைச்சரவைக்கு விடுவது முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தது. நிதியமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டிலே இல்லாத நேரத்திலே இது வந்ததால் அதுபற்றித் தகவல் இல்லாமல் இருக்கலாம்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அதைப்பற்றி ஒன்றும் இல்லை, தவருகப் பதில் தந்தார்கள் என்று வந்துவிடக்கூடாது. இது புதிய மாற்றம். நான் ஒரு மாதமாக இங்கேதான் இருக்கிறேன். எனக்குத் தெரியவில்லை. மந்திரி சபைக்கு அதைப்பற்றி ஒன்றும் தகவல் இல்லை. தவருன தகவல் கொடுத்தேன் என்ற நிலைமை வருமென்பதற்காகவும், நண்பர் சன்முகம் அவர்கள் என்னைப் பின்தொடர்ந்து சொல்லிய நிலையால் ஏற்பட்டுவிடும் என்ற காரணத்தால் சொல்லுகிறேன். தென் மண்டலம் கூடாது என்ற நிலை. அவர்கள் கூறுவது தென் மண்டலம் வருவது மாதிரி தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறது. விதிமுறைகளில் இப்படிப் பட்ட நிலை இருப்பதாக மாற்றிச் சொன்னுர்கள். அந்தத் தகவல் எனக்கு இல்லை. எனவே, இதைத் தன்னிலை விளக்கமாகக் கூறுகிறேன். உணவு அமைச்சர் கூறியதை மறுத்துச் சொல்வதற்காக நான் இங்கு சொல்லவில்லை.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அமைச்சரவையின் முழுப் பொறுப்பும் முதலமைச்சரைச் சார்ந்திருக்கிறது. ஒரு துறை அமைச்சரைச் சார்ந்த திட்டம் முதலமைச்சருக்குத் தெரிந்திருக்க வேண்டுமே தவிர எல்லா அமைச்சர்களுக்கும் தெரிந்திருக்க வேண்டுமென்று இல்லை. முதலமைச்சரைத்தான் முழுப்பொறுப்பும் சார்ந்திருக்கிறது. ஆகவே, கேபினெட் ரெஸ்பான்ஸிபிலிட்டி என்ற அளவில் முதலமைச்சரைச் சார்ந்ததாக இருக்கிறது. குறிப்பிட்ட கருத்து உணவு அமைச்சருக்கும் முதலமைச்சருக்கும் உட்பட்ட கருத்து. அந்தக் கருத்து முழுவதும் இன்னொரு அமைச்சருக்குத் தெரியாமலிருக்கலாம். ஒருவருக்குத் தெரியாமலிருப்பதை வைத்து, செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யத் தவறி விட்டார் என்ற நிலை ஏற்படாது. ஆகவே, முதலமைச்சரைக் கலந்துகொண்டு செய்திருக் கிருர்கள். சிலபல பிரச்னைகள் கேபினெட்டிற்குத் தெரியாமல் இருந்திருக்கலாம். ஆகவே, இதில் எந்தவிதமான வேறுபாடும் இல்லை.

THIRU K. VINAYAKAM: On a point of Order, Sir. Now that the Hon. Leader of the House has come out with a statement trying to clear the confusion created by two Hon. Ministers trying to give answers out of their memory or out of their past experience without basing their answer on any of their records of referring to the files, am I to understand that these answers should go unchallenged? I want your ruling, Sir.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உணவு அமைச்சரவர்கள் அண்மையிலே நடந்ததைச் சொன்னுர்கள். அதுதான் உறுதியான விடை. நம்முடைய நிதியமைச்சரவர்கள் முன்பிருந்த நிலையைச் சொன்னுர்கள். அண்மையில் நடந்த நிகழ்ச்சி தெரியாது என்று சொல்லிவிட்டார்கள். எனவே, உணவு அமைச்சரவர்கள் சொல்லிய விடைதான் இப்பொழுது ஏற்றுக்கொள்ளக்கூடிய விடை.

THIRU T. MARTIN : On a point of Order, Sir. In the rank of Ministers, the Hon. Minister for Finance . . . .

MR. SPEAKER : There is no point of Order.

Tamil Nadu Paddy and Rice Movement Control Order

* 221 *Q.*—Thiru K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state whether the Government of Tamil Nadu has declared a five mile belt area around the district of Thanjavur as 'Notified area under the Tamil Nadu Paddy and Rice-movement Control Order?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : 'இல்லை'.

திரு. கே. விநயகம் : தஞ்சை மாவட்டத்தைச் சுற்றி 5 மைல் எல்லையோரப் பகுதியை அறிக்கையிடப்பட்ட பகுதியாகப் போட்ட காரணம் அங்கிருந்து அரிசி வெளியே போகாமல் இருந்தால் அரிசி விலை குறையும் என்ற நோக்கத்தோடுதானே போட்டார்கள். ஆனல் . . .

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை என்று சொன்னேன்.

திரு. கே. விநயகம் : இல்லை என்று தெரிவித்தார்கள். தங்களுடைய இலாக்காவின் மூலம் வந்த ஒரு செய்தியைப் பார்த்து விட்டுத்தான் இந்தக் கேள்வியைப் போட்டேன். அப்படிப் போட்டது தப்பா? இலாக்கா கொடுத்த அறிக்கை சரியா அல்லது தாங்கள் இப்பொழுது கூறுவது சரியா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இதைப் போடலாமா என்று ஆலோசனை செய்யப்பட்டது உண்மை. ஆனல், வேண்டியதில்லை என்று, கைவிடப்பட்டு விட்டது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, 15 மைல் பெல்ட் ஏரியா என்று கன்னியாகுமரி ஜில்லாவிற்கு விதி பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. அந்தக் காரணத்தால் இரு தாலுக்காக்களிலே இன்றைக்கு உணவு விநியோகத்திற்குப் பெரும் கஷ்டம் இருக்கிறது. அங்கிருக்கும் கடைகளிலே சரியாக அரிசி விநியோகம் நடக்கவில்லை. மிகவும் புளித்துப்போன அரிசியைத் தருகிறார்கள். ஆகவே, அடையாளக் கார்டு முறையை உருவாக்க வேண்டுமென்று கான்பரன்ஸ் கூடி, எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் கூடி முடிவு செய்திருக்கிறார்கள். அந்தப் பிரச்னையை அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். அதன் மீது அரசாங்கம் என்ன நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, ஒலவக்கோடு தாலுக்காவைப்பற்றி மாவட்ட ஆட்சி மன்றத் தலைவர் அவர்கள் அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் முடிவெடுக்கப்படும்.